**தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 22 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் அலுவலத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப் படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகள் நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.2.1 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. முகாமைத்துவ குறைபாடுகள்<br>2. தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள்<br>3. இணக்கமின்மை<br>4. முனிதவள முகாமைத்துவ குறைபாடுகள | 2.5<br>2.4<br>2.9<br>2.10 |
| 127(2) | தமது நிர்வாகத்தில் காணப்படும் திணைக்களங்களில் அவ்வப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்பொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்றதெனவும் | வாகன உபயோகத்திலான குறைபாடுகள் | 2.3(ஆ) |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற்கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | மிகை நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.6(அ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அலுவலகத்தினால் நிறைவேற்றபட வேண்டிய 33 பிரதான விடயங்கள் காணப்பட்டதுடன், எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட, நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி மற்றும் தற்போது சேவையாற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயற்பாடுகளுக்கான நிதியத் தேவைத் திட்டம் (Imprest Requirement Plan) தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்பித்திருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அதனை உள்ளடங்கியிருக்கவில்லை.

### 2.2 பெறுகை செய்முறையினுடன் வழங்கல் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

#### 2.2.1 பெறுகைத் திட்டமிடல்

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின் போது நீர் வழங்கல் செய்முறை மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 42.83 ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 42.52 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அனைத்து பெறுகைகளும் திட்டத்தில் உட்படுத்தியிருக்காததுடன், பெறுகை நேர அட்டவணையொன்று தயாரித்திருக்கவில்லை.

#### 2.2.2 பெறுகையினை செயற்படுத்துதல்

(அ) 2017 திசெம்பர் மாதம் 29 திகதி கூட்டுத்தொகை ரூபா 808,348 தொகை பெறுமதியான 05 கணினிகளின் பெறுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 30 ஆம் இலக்க அலுவலகத்தின் தேவையினை இனங்காணாமல் 05 கணினிகள் கொள்வனவு செய்திருந்ததுடன், அந்த அலுவலகம் அவற்றில் 03 ஐ மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. நிதி அதிகாரமளித்தல்களின் பிரகாரம் ரூபா 500,000 இனை விட மிகையான கொள்வனவுகள் தொடர்பாக செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3, 5.2, 5.3.1, 5.3.3, 5.3.10, 5.4.10, 8.9.1(ஆ), 8.9.3 பெறுகை கைநூலின் 5.4.8, 6.3.6, 8.9.3 மற்றும் NPA/SBD/GOODS/01 இலக்கங் கொண்ட நியம விலை மனு அழைத்தல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 978,061 பெறுமதியான நிருவாகப் பிரிவிற்கான 04 வாயு சீராக்கி இயந்திரங்கள் பொருத்தும் பெறுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.1, 5.3.10, 5.4.10, 6.3.3, 7.11.1 மற்றும் NPA/SBD/GOODS/01 இலக்கம் கொண்ட நியம விலை மனு

அழைப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) விலை மனுக்களை மதிப்பாய்வு செய்யும் போது, தொழில் நுட்ப மதிப்பாய்வு குழு மற்றும் பெறுகை குழுவினால் அந்த பராமரிப்பு கிரயத்தை கவனத்தில் எடுத்திருக்காததுடன், ஒப்பந்த உடன்படிக்கையில் இயந்திர பராமரிப்பு தொடர்பாக தகவல்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

(iii) விலைமனு அழைப்பு பதிவேடுகளில் குறித்தொதுக்கியவைகள், நிபந்தனைகளில் இருந்து மற்றும் அரச பெறுகைகள் வழகாட்டல் கோவையின் பிரிவு 5.3.1(ஈ) இற்கு புறம்பாக, பெறுகைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட விலை மனுதாரரின் தேவை மற்றும் பண்டங்கள் வழங்குவதற்கான இயலுமையின் மீது பெறுகை நிறுவனத்தினால் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது.

**(இ) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்**

(i) 401 ஆம் இலக்க உறுதிச்சான்றின் மூலம் ரூபா 193,471 இற்கான பெறுமதியான பண்டங்களின் பெறுகையின் போது, அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.1, 5.2, 5.3.2 மற்றும் 3.4.2(அ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 612 ஆம் இலக்க உறுதிச் சான்றின் மூலம் மேற்கொண்டிருந்த ரூபா 348,475 இற்கான பண்டப் பெறுகையின் போது, அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.1, 5.3.10, 7.11.1 பெறுகை கைநூலின் 7.11.1 மற்றும் NPA/SBD/GOODS/01 இலக்கம் கொண்ட நியம விலைமனு அழைப்பு பதிவேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.3.2 ஆம் பிரிவுக்கு முரணாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையினை கடைபிடிக்காமல், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 216,437 இற்கான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) கூட்டுத்தொகை ரூபா 1,223,212 இற்கான பெறுகை மேற்கொள்ளும் போது, அரச பெறுகை வழிகாட்டல் கைநூலின் 3.4.2(அ), 5.3.10(அ), 6.3.1(அ),(ஆ), 6.3.3 மற்றும் பெறுகை கைநூலின் 6.3.3, 6.3.6 குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அலுவலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக, 2017 ஜூன் 28 திகதிய 01/2017 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் அறிவுறை மற்றும் இணைப்பு VIII பிரகாரம் சரியான உரிய குறியீட்டு இலக்கத்தின் கீழ் சொத்துக்கள் இனங்கண்டு வகைப்படுத்தியிருந்தது மோட்டார் வாகனங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்கள் மாத்திரமே. ஏனைய நடைமுறையல்லாத சொத்துக்களை இனங்காணல் மற்றும் குறியீட்டு இலக்கமிடல் அந்த சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் நடைபெற்றிருக்கவில்லை.

**(ஆ) வாகனப் பாவணை**

2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கக் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 தீர்த்திருக்காத கணக்காய்வு பந்திகள்**

அலுவலகத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியுள்ள கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் தொடர்பாக அலுவலகத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2013<br>2015 | 1.6(ஈ)(ii)<br>3.4(ஆ) | உள்வருதல் வெளிசெல்லல்களை உறுதிப்படுத்துவற்கான விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) | 2013<br>2014<br>2015 | 1.6(எ)<br>1.8<br>3.5 | பெறுகைகள் தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2015 | 3.4(ஆ) | நிரந்தர கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படும் படிகளுக்காக அடிப்படையாக எடுக்க வேண்டிய காலம், விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு பதிலாக தினவரவு இடாப்பை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,648,875 இற்கான போக்குவரத்து படி மற்றும் ரூபா 475,382 இற்கான மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

**2.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனங்களில் இருந்து அகற்றப்படும் டயர், பெட்டறி மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றை ஏல விற்பனை செய்யாமல், 30 இலக்க அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிரந்தர கடமை நேரத்தின் பின்னர் கொடுப்பனவு செய்யப்படும் படிகளுக்காக அடிப்படையாக எடுக்கும் காலம், விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு பதிலாக தினவரவு பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது பி.ப. 6.30 இன் பின்னர் பாராளுமன்ற கூட்டம் முடிவடைந்த 67 நாட்களுக்காக ரூபா 1,671,799 இற்கான போக்குவரத்து படி ரூபா 597,020 தொகை மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளம் மற்றும் 2017 ஆண்டில் மீதியான விடுமுறைகளுக்கான கொடுப்பனவு ரூபா 964,128 தொகை ஆக மொத்த கூட்டுத்தொகை ரூபா 3,232,947 இற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.6 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் கடந்த ஆண்டின் போது அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2016 | மீண்டுவரும் | 84.79 | 53.30 | 31.49 | 37.13 |
| | மூலதன | 49.33 | 4.61 | 44.72 | 90.65 |
| | **மொத்தம்** | **134.12** | **57.91** | **76.21** | **56.82** |
| 2017 | மீண்டுவரும் | 77.98 | 62.69 | 15.29 | 19.60 |
| | மூலதன | 86.58 | 77.76 | 8.82 | 10.18 |
| | **மொத்தம்** | **164.56** | **140.45** | **24.11** | **14.65** |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல்**

04 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 4.45 மில்லியனிற்கான மிகை ஏற்பாடு செய்திருத்தல் மற்றும் அந்த செலவு விடயங்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 1.19 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால், மீதித்தொகை வழங்கியிருந்த ஏற்பாடுகளில் 51 சதவீதம் முதல் 94 சதவீதம் வரை வீச்சு அளவினை கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் ஆரம்ப மீதிகள் மற்றும் முன்னைய ஆண்டின் இறுதி மீதி இடையே ரூபா 187,508,660 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரை ஆக்கிய போது கடந்த ஆண்டுகளின் போது கணக்கீடு செய்திருந்த சில நடைமுறை அல்லாத சொத்துக்களை இனங்காணும் போது ஏற்பட்டிருந்த சிக்கல்களின் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்ததென அலுவலகத்தினால் வெளியிடப்பட்டது. எனினும் அதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்காததுடன், கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு முன்னர் உரிய நிறுவனங்களில் இருந்து முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

(இ) வாகனங்கள் மற்றும் காணிகளை முன்னேற்றுவது தவிர, 2014 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 40,019,363 தொகைக்கான நடைமுறை அல்லாத சொத்துக்களின் கிரயம் மாத்திரம், ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருந்ததுடன், 2004-2014 ஆண்டுகளின் போது அலுவலகத்தினால் கொள்வனவு செய்திருந்த சொத்துக்களின் கிரயத்தை பதிவேடு செய்திருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் என ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 206.34 மில்லியன் பெறுமதியான 30 ஆம் இலக்க அலுவலகம் உடனான காணியின் காணி உறுதி கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அலுவலகத்தின் விடய இலக்கம் 01901 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.50 | 2.49 | 1.50 | 1.68 | 7.50 | 6.35 |

## 2.8 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணினிகள், துணைக்கருவி மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) | நாளதுவரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | வாகனங்கள் பட்டியலிடும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | நாளதுவரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | விலைமனு அழைப்பு பதிவேடு | அரச பெறுகை வழிகாட் டல் கோவையின் 5.2.1 | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தொடர்பு

---

| | |
|---|---|
| (அ) நிதியச் சட்டமுறையான ஏற்பாடுகள் | |
| 2008 இன் 10 ஆம் இலக்க முத்திரை கட்டணம் (விஷேட ஏற்பாடு) (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டண (விஷேட ஏற்பாடு) சட்டத்தின் 8(1) ஆம் உபபிரிவின் பிரகாரம், சட்டத்தின் 7 ஆம் பிரிவு | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 25,000 இனை மிகைத்துள்ள 51 கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் தொடர்பாக முத்திரை கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 104, 109 | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக முறையே பொது 283, 284 மற்றும் 285 பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப அறிக்கைகள், இறுதி அறிக்கைகள், நட்டங்களை பதிவழிப்பதற்கான விண்ணப்பங் களின் கணக்காய்வளர் தலைமை அதிபதியின் பிரதிகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்காததுடன், ரூபா 50,000 இனை மிகைத்துள்ள இரண்டு நட்டங்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 | அலுவலகத்திற்கு சொந்தமான 14 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது 126,196 கிலோ மீற்றரகள் ஓடியிருந்ததுடன், எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணைகளுக்கு ரூபா 3,464,868 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ்விபரங்கள் அடங்கப்படக்கூடிய விதமான வாகனங்கள் சம்பவ குறிப்பேடுகளில் எரியப்பட்ட எரிபொருள் எண்ணிக்கை மற்றும் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு பதிவுகள் பூர்த்தி செய்திருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணங்கள் 752(1), 752(2), 752(3) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 4,081,643 இற்கான பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், பொருட் பதிவேட்டின் பெறுவனவுகள் பக்கத்தில் |

| | | |
|---|---|---|
| | | பதிவு செய்திருந்த அந்த பெறுவனவுகள் உட்பட அனைத்து பெறுவனவுகளும் மற்றும் வழங்கல்கள் பதிவுகளை உறுதிப்படுத்துவதற்காக இலக்க மிடப்பட்ட பண்டப்பதிவேடு உறுதிச் சான்று கோவையொன்று, பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 139(4), 260(1) மற்றும் 264(1) | கூட்டுத்தொகை ரூபா 3,894,412 தொகைக்கான உறுதிச் சான்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் கிடைத்தற்கான பெறுவோரின் அடையாளத்தை உறுதிப்படுத்தியதற்கான அல்லது குறிப்பிடப்பட்ட நபருக்கே பணம் செலுத்தப்பட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 138(5), 231(1) | இன்வொயிஸ்களின் மூலப் பிரதிகளுக்கு பதிலாக மின்அஞ்சல் மூலம் பெற்றிருந்த மதிப்பீடு மற்றும் இன்வொயிஸ்களுக்காக உறுதிச்சான்றுகள் சான்றுபடுத்த ப்பட்டு மீளாய்வாண்டின் போது, இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 105,254 இற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

(இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2009 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009, 2009 ஜூன் 17 திகதிய இலக்கம் 09/2009(1), மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய இலக்கம் 03/2017 கொண்ட சுற்றறிக்கைகள் | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் அமைச்சரின் பதவியணி யினர், அமைச்சின் செயலாளர்கள் நிறுவனத் தலைவர்கள் உட்பட அனைத்து அரச ஊழியர்கள் தமது கடமை இடத்திற்கு உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் விரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரத்தின் மூலம் உறுதிப் படுத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு மேற்கொண்டிருக்க வில்லை. |

(ஈ) அரச நிதிச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| 2016 பெப்ரவரி 16 திகதிய 431(1) இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் செயற்படாமல், வெளிநாட்டு பிரயாண பிரயாணச் சீட்டுக்களுக்காக ரூபா 257,000 இற்காக கொடுப்பனவு மேற்கொள் ளப்பட்டிருந்தது. |

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

அலுவலகத்தின் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான மற்றும் வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 43.66 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 04 | 0 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | 0 |
| (iii) | இரண்டாம் நிலை | 12 | 10 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 15 | 03 |
| (v) | அமைய/ ஒப்பந்த/ தற்காலிக (எதிர்கட்சித் தலைவரால் தனிப்பட்ட பதவியணியுடன்) | 41 | 16 | 25 |
| | மொத்தம் | 78 | 48 | 30 |